இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 173 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – தை 20 – ஞாயிற்றுக்கிழமை 02 பிப்ரவரி 2025 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 173 : Thiruvalluvar Year - 2056 - Thai 20 - Sunday 02 February 2025 - Madurai 16 Pages ₹ 5.00


## ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை:

# தமிழ்நாடு மீண்டும் புறக்கணிப்பு!





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (1.2.2025) தலைமைச் செயலகத்தில், புதிதாக நியமிக்கப்பட்டுள்ள 9 மாவட்ட ஆட்சித் தலைவர்களான ஆர்.சதீஷ், எஸ்.சரவணன், எம்.பிரதாப், சி.தினேஷ் குமார், எஸ்.சேக் அப்துல் ரகுமான், கே.தர்பகராஜ், வி.மோகனசந்திரன், ஆர்.சுகுமார், திருமதி கே.சிவசவுந்தரவள்ளி ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### அரசு அலுவலகங்களுக்கு வரும்

## பொதுமக்களிடம் கனிவுடன் நடந்து குறைகளை தீர்த்திடுக!

### புதிய மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, ஜன.13-**

**“அரசு அலுவலகங்களுக்கு வரும் பொதுமக்களிடம் கனிவுடன் நடந்து அவர்களின் குறைகளை தீர்த்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தன்னை சந்தித்த புதிய மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் வலியுறுத்தினார்.**

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (1.2.2025) தலைமைச் செயலகத்தில், புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களான ஆர்.சதீஷ் (தருமபுரி), எஸ்.சரவணன் (திண்டுக்கல்), எம்.பிரதாப் (திருவள்ளூர்), சி.தினேஷ் குமார் (கிருஷ்ணகிரி), எஸ்.சேக் அப்துல் ரகுமான் (விழுப்புரம்), கே.தர்பகராஜ் (திருவண்ணாமலை), வி.மோகனசந்திரன் (திருப்பத்தூர்), டாக்டர் ஆர்.சுகுமார் (திருநெல்வேலி), திருமதி கே.சிவசவுந்தரவள்ளி (திருவாரூர்) ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

இந்தச் சந்திப்பின்போது, முதலமைச்சர் அவர்கள் புதிய மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் உரையாற்றியபோது,

இன்று முதல் மக்களுடன் நேரடி தொடர்பில் களத்தில் இருக்கப் போகும் நீங்கள், அரசின் முத்திரை திட்டங்கள், அன்றாடம் செயல்படுத்தும் திட்டங்கள், மக்கள் நலத்திட்டங்கள், இவற்றுக்கெல்லாம் முத்தாய்ப்பாக, அடிப்படை தேவைகளை நிறைவேற்ற வேண்டிய திட்டங்களில் அதிகம் கவனம் செலுத்த வேண்டும் என்றும், அரசு அலுவலகங்களுக்கு சென்று திடீர் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

மேலும், மக்கள் குறை தீர்ப்பு முகாம் மனுக்கள் மீதும், முதல்வரின் முகவரி மனுக்கள் மீதும் சிறப்பு கவனம் செலுத்தி, தீர்வு காணப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

**மக்களின் குறைகளை தீர்த்திடுவீர்!**

அரசு அலுவலகங்களுக்கு வரும் மக்களிடம் கனிவுடன் நடந்து கொண்டு, அவர்களின் குறைகளை அங்கேயே தீர்த்து வைப்பதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும் என்றும், சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுடன் மாவட்டங்களில் உள்ள பிரச்சினைகள் குறித்து கலந்தாலோசித்து தீர்வு காண வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

**மக்கள் பாராட்டும்படி நடந்து கொள்வீர்!**

ஒவ்வொரு மாவட்டமாக தொடர்ந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டு வரும்போது, அங்கு மக்களை சந்திக்கின்றபோது, அவர்கள் எங்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் சிறந்த மாவட்ட ஆட்சித் தலைவர் என்று பாராட்டும்படியாக பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

மக்களின் பாராட்டைப் பெற்ற முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் போன்ற திட்டங்களின் செயல்பாடுகளை நேரடியாக களத்திற்கு சென்று ஆய்வு செய்ய வேண்டும் என்றும், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், புதுமைப் பெண் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம் போன்ற திட்டங்களை கவனமாக கண்காணித்து திட்டங்கள் தகுதியுள்ள ஒவ்வொருவருக்கும் சென்று சேர்வதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவராக பணியாற்ற இருக்கும் அனைவருக்கும் தனது பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துக் கொண்டார்.

இந்த நிகழ்வின்போது, தலைமைச்செயலாளர் நா.முருகானந்தம், பொதுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## பீகார், ஆந்திராவுக்கு கூடுதல் திட்டங்கள்!

**புதுடெல்லி, பிப். 2 -**

**ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டிற்கு புதிய திட்டங்கள் எதுவும் அறிவிக்கப்படாதது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சிக்கும் ஒன்றிய அரசுக்கு பல்வேறு தரப்பினரும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.**

2025-2026 ஆம் நிதியாண்டிற்கான நிதி நிலை அறிக்கையை, நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார். அதில், பா.ஜ.க. ஆளும் பீகார் மற்றும் டெல்லி உள்ளிட்ட வடமாநிலங்களுக்கு ஏராளமான புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதேநேரம், ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு எந்த நிதியும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. தமிழ்நாட்டிற்கு புதிய ரயில் திட்டங்கள், சென்னை மெட்ரோ ரயில் 2ம் கட்ட திட்டத்திற்கான நிதி, கோவை மற்றும் மதுரை மெட்ரோ ரயில் திட்டங்கள் உள்ளிட்டவைகளுக்கு நிதி ஒதுக்கவேண்டும் என, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்.

**தமிழ்நாடு என்ற சொல்லே இல்லை!**

ஆனால், தற்போது தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட்டிலும் தமிழ்நாட்டிற்கு புதிய திட்டங்கள் எதுவும் அறிவிக்கப்படாதது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மேலும், கடந்த ஆண்டை போன்று இந்த நிதிநிலை அறிக்கையிலும் தமிழ்நாடு என்ற வார்த்தையை கூட, நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் உச்சரிக்கவில்லை. தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சிக்கும் ஒன்றிய அரசுக்கு பல்வேறு தரப்பினரும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

புதிய வருமான வரி சட்டம் அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என பட்ஜெட்டில் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்துள்ளார். காப்பீட்டுத் துறையில் 100 சதவீத நேரடி அன்னிய முதலீட்டுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

நடுத்தர வர்க்கத்தினருக்கான 12 லட்சம் வரை வருமான வரி கிடையாது என்று கூறப்பட்டுள்ளது.

புதிய வருமான வரி திட்டத்தில் 12 லட்சம் ரூபாய் வரை வருமான வரி கிடையாது என்றும் இந்த புதிய வருமான வரி சலுகை மூலம் நடுத்தர மக்கள் பயன்பெறுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, மாத ஊதியம் ஒரு லட்சம் ரூபாய் வரை பெறுவோர் இனி வரி கட்டத் தேவையில்லை என்றும் இதற்கு முன்பு 3 லட்சம் ரூபாய் வரை ஆண்டு வருமானம் பெறுவோருக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

**பீகாருக்கு கூடுதல் திட்டங்கள்!**

நாடாளுமன்றத்தில் ஒன்றிய நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்த நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், பீகாருக்கு ஏராளமான திட்டங்களை அறிவித்துள்ளார். அதன்படி, பீகார் மாநில விவசாயிகள், கூட்டுறவு அமைப்புகளுக்கான புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. தேசிய உணவு தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மை பயிலகம் தொடங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதான் திட்டத்தின் கீழ் பீகாரில் புதிய விமான நிலையங்கள் உருவாக்கப்படும் என்றும் ஏற்கெனவே இருக்கும் பாட்னா விமான நிலையமும் விரிவாக்கம் செய்யப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. பீகாரில் பசுமை விமான நிலையம் உட்பட புதிதாக 3 விமான நிலையங்கள் அமைக்கப்படும் என ஒன்றிய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பாட்னாவில் உள்ள ஐ.ஐ.டி. விரிவாக்கம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார். சட்டப்பேரவைத் தேர்தலை மனதில் வைத்து பீகாருக்கு மட்டும் அதிக திட்டங்களை அறிவித்திருப்பதாக காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டியுள்ளன.

# இந்தியாவிலேயே தமிழ்நாடு 2-ஆவது இடம்!

### ஒன்றிய அரசின் பொருளாதார ஆய்வறிக்கையில் பாராட்டு!

**புதுடெல்லி, பிப். 2 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ‘திராவிட மாடல்’ ஆட்சியில் தோல் பொருள்கள் ஏற்றுமதியில் 47 சதவீதம், காலணி உற்பத்தித் தொழில்களில் 2 இலட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு வேலை வாய்ப்புகள், இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தால் மாணவர்களின் கற்றல் ஆர்வம் வெகுவாக அதிகரிப்பு, தமிழ்நாடு இந்திய அளவில் மாபெரும் சாதனை புரிந்துள்ளது” என ஒன்றிய அரசின் பொருளாதார ஆய்வறிக்கை பாராட்டுத் தெரிவித்துள்ளது.**


நாடாளுமன்றத்தில் ஒன்றிய நிதி அமைச்சர் அவர்களால் நேற்று முன்தினம் (31.1.2025) 2024-25 ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கை முன்வைக்கப்பட்டது. அது காலணிகள் உற்பத்தி தொழில் வளர்ச்சி, இல்லம் தேடிக் கல்வித் திட்டம் ஆகியவற்றில் தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள சிறப்பான முயற்சிகளை வெளிப்படுத்தியுள்ளது.

பாரம்பரிய தோல் பொருட்கள் தயாரிப்புத் துறையில் முன்னணி மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்ந்துவரும் சூழலில் தோல் அல்லாத காலணிகள் உற்பத்தியிலும் தமிழ்நாடு சிறப்பான முன்னேற்றம் கண்டு வருகிறது. தமிழ்நாடு இந்தியாவின் தோல் பொருட்கள் மற்றும் காலணிகள் உற்பத்தியில் 38% பங்களிப்பும் இந்தியாவின் மொத்த தோல் பொருள்கள் ஏற்றுமதியில் 47% பங்களிப்பையும் தமிழ்நாடு வழங்கியுள்ளது. தோல் பொருட்கள் உற்பத்தித் துறையில் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளதாகவும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

தமிழ்நாடு சமீபத்திய ஆண்டுகளில் முதலீடுகள் செய்வதற்காக பெரிய காலணி உற்பத்தியாளர்களை ஈர்ப்பதற்கும், கிராமப்புறங்களில் தொழிற்பேட்டைகளை உருவாக்கவும் எடுத்துள்ள முயற்சிகளை இந்த ஆய்வு எடுத்துக்காட்டியுள்ளது. குறிப்பாக, பெண்களுக்கான வேலை வாய்ப்பை வளர்த்துள்ளது என்பதையும் குறிப்பிட்டுள்ளது.

**பெண்களுக்கான வேலைவாய்ப்பு அதிகரிப்பு!**

தமிழ்நாடு அரசின் இத்தகைய முயற்சிகள் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்ப்ப





தில் முக்கியப் பங்கு வகிப்பதையும், குறிப்பாக சர்வதேச அளவில் புகழ்வாய்ந்த காலணி உற்பத்தி நிறுவனமான நைக் நிறுவனம் தைவான் நாட்டு ஃபெங் தே நிறுவனத்துடன் தமிழ்நாட்டில் தோல் பொருள்கள் உற்பத்தி செய்வதற்கான ஒப்பந்தம் செய்துகொள்ள மேற்கொண்டுள்ள முயற்சிகள் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.

**மதுரை - சிவகங்கை மாவட்டங்களில் காலணி தொழிற்சாலைகள்!**

தமிழ்நாடு அரசு மதுரை மற்றும் சிவகங்கை உள்ளிட்ட மாவட்டங்களில் காலணி உற்பத்தி நிறுவனங்களை அமைப்பதற்குத் தேவைப்படும் இடங்களை அடையாளம் கண்டறிந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் தொழில் வழிகாட்டி நிறுவனமான “Guidance Tamil Nadu” ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மூலம் தைவான் நிறுவனங்களுடன் இணைந்து காலணி தயாரிப்புத் துறையில் முக்கிய முதலீட்டாளர்களுடன் ஒப்பந்தங்களை வலுப்படுத்தி வருகிறது. “Guidance Tamil Nadu”, நைக் நிறுவனத்தின் முக்கிய ஒப்பந்த உற்பத்தியாளர்களான போ சென், ஹாங் ஃபூ, டேக்வாங் மற்றும் சாங்ஷின் போன்றவர்களுடன் உறவுகளை ஏற்படுத்தி உள்ளது. இந்த முயற்சிகள் தமிழ்நாட்டை முதலீட்டாளர்களின் முகவரியாக அடையாளப்படுத்தி வருவதையும் இந்த ஆய்வு அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழ்நாட்டில் முதலீட்டாளர்களின் தேவைக்கு ஏற்ப வழங்கப்படும் ஊக்கத் தொகை முறை, மூலதன மானியங்கள், ஊதிய மானியங்கள் மற்றும் நில விலை மானியங்கள் போன்றவற்றை தமிழ்நாடு அரசு சிறப்பாக வழங்கி வருகிறது என்றும் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு, 2022ல் காலணி மற்றும் தோல் பொருட்களுக்கென்று தனியே ஒரு கொள்கையை உருவாக்கியுள்ளது. இது பெரிய உற்பத்தியாளர்கள் மற்றும் சிறிய நிறுவனங்கள் ஆகிய இரண்டையும் ஆதரிக்கும் ஒரு விரிவான சூழலை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டிருப்பதையும் ஆய்வறிக்கை பாராட்டியுள்ளது.

**இல்லம் தேடிக் கல்வித் திட்டம்!**

தமிழ்நாட்டின் இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தை ஒரு புதுமையான முயற்சியாக ஆய்வறிக்கை விவரித்து உள்ளது. கொரோனா 19 பெருந்தொற்று காரணமாக ஏற்பட்ட கல்வி இடைவெளியைக் குறைப்பதற்காக இத்திட்டம் தொடங்கப்பட்டது.

மாநில திட்டக்குழு 2022 செப்டம்பரில் அரியலூர், கடலூர், நாகப்பட்டினம், சேலம், திருவாரூர், விழுப்புரம் ஆகிய ஆறு மாவட்டங்களை உள்ளடக்கிய 362 பள்ளிகளில் தன்னார்வலர்கள், ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் பங்களிப்புடன் ஒரு விரிவான ஆய்வின் மூலம் திட்டத்தின் தாக்கத்தை மதிப்பீடு செய்ததில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் கற்றல் அனுபவத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டதாகத் தெரிவித்துள்ளனர். மேலும் கல்வி முறை மாணவர்களின் சுவாரசியமான செயலாக மாறியுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

கூடுதலாக, ஆசிரியர்கள் விளையாட்டு அடிப்படையிலான அணுகுமுறை மூலம் குழந்தைகளின் கற்றல் ஆர்வம் அதிகரித்திருப்பதை உறுதிப்படுத்தி உள்ளனர். இதன் விளைவாக, மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் வகுப்பறைகளில் பங்கேற்பதாகவும், மாணவர்கள் கணிதம் மற்றும் மொழித் திறன்களில் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் கண்டுள்ளனர் என்றும் பொருளாதார ஆய்வு அறிக்கை குறிப்பிட்டுள்ளது மகிழ்ச்சிதரத்தக்க செய்தியாகும்.

மொத்தத்தில் ஒன்றிய அரசின் பொருளாதார மதிப்பீட்டு ஆய்வு அறிக்கை தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி, கல்வி வளர்ச்சி ஆகியவை குறித்துக் கூறியுள்ள விவரங்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் நிர்வாக மேன்மையில் இந்திய அளவில் தமிழ்நாடு அரசு படைத்து வரும் சாதனைகளை வெளிப்படுத்தியுள்ளது.